அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூடம் - நோர்வே
அன்னைத் தமிழ்முற்றப் போட்டி 2026

பேச்சு 2018 ஆம் ஆண்டு பிறந்த மாணவர்கள்

வளாகங்களில் முதல் மூன்று நிலைகளையும் அடைந்த மாணவர்கள் அன்னைத் தமிழ்முற்றப் போட்டியில் பங்குபெறும் வாய்ப்பைப் பெறுவார்கள்.

# “நேரம் நம் வாழ்வின் செல்வம்”

**நமது வாழ்வில் நேரத்தின் அவசியம் அளவற்றது. ஒரு பொருளை இழந்துவிட்டால், அதை மீண்டும் பெற முடியும். ஆனால், இழந்த நேரத்தை நாம் திரும்பப் பெற முடியுமா? முடியாது.**

**அதனால், நேரத்தை வீணாக்காமல் பயன்படுத்தக் கற்றுக் கொள்ள வேண்டும். பறவைகளைப் பாருங்கள், அவை நாள்தோறும் அதிகாலையில் எழுந்து உணவைத் தேடிச் செல்கின்றன. அவ்வாறே நாமும் படிக்க, விளையாட, ஓய்வெடுக்க என எமது நேரத்தை திட்டமிட்டால் வாழ்க்கை சிறப்பாக அமையும்.**

**இயற்கையும் நேரத்தை மதிக்கிறது. கதிரவனும் நிலாவும் நேரத்திற்கு வருகின்றன. பருவ காலங்கள் மாறி மாறி பூமிக்கு மழையையும், பனியையும், சூட்டையும், குளிரையும் தவறாது தருகின்றன. அவ்வாறே, மரங்கள் துளிர்ப்பதையும், இலைகள் உதிர்வதையும் பார்க்க முடிகிறது. அதுபோல, மாணவர்கள் ஆகிய நாமும் நேரத்தைச் சரியாகப் பின்பற்ற வேண்டும்.**

**காலமும் நேரமும் பொன்னானது என்பதை உணர்ந்து, நாம் அனைவரும் நேரத்தை மதித்து, வாழ்வில் வெற்றி பெற வேண்டும்.**

**நன்றி! வணக்கம்**

அனைத்து மாணவர்களுக்கும் இப்பிரதி வழங்கப்படுகிறது.
அனைத்து மாணவர்களையும் ஊக்கப்படுத்துவது ஆசிரியர் கடமை.
மாணவர்களை தயார்படுத்துவது பெற்றோரின் கடமை.